முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2018-07-21
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண் டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

எட்டு (08) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.4*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றுக்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** கீழ்வரும் விபரங்கள் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சிறிபால டிரேடர்ஸ்** உடன் தொடர்புபட்டதாகும் :

| | **ரூ.** |
|---|---:|
| ஆரம்பத் தொக்கு | 40,000 |
| இறுதித் தொக்கு | 30,000 |
| கொள்வனவு | 350,000 |
| விற்பனை | 600,000 |

2018 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாப விகிதமாக (gross profit margin) அமைவது :

(1) 60 %. (2) 40 %. (3) 37 %. (4) 53 %.

(02 புள்ளிகள்)

**1.2** கம்பனிகள் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க :

**(a)** கம்பனி ஒன்றின் முன்னுரிமைப் பங்குதாரர்கள் கம்பனியின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றனர்.

**(b)** கம்பனி இலாபமீட்டினால் மாத்திரமே தனிச்சங்களை வைத்திருப்போருக்கு (debenture holders) வட்டி செலுத்தப்படுகிறது.

**(c)** சாதாரண பங்குதாரர்களுக்கு நிலையான பங்கிலாபங்களைச் செலுத்த வேண்டிய எவ்வித கடப்பாடுகளும் இல்லை.

மேற்கூறிய கூற்றுக்களில் கம்பனிகள் தொடர்பான சரியான கூற்று / கூற்றுக்களைத் தெரிவுசெய்க :

(1) **(a)** மாத்திரம் (2) **(b)** மாத்திரம்

(3) **(c)** மாத்திரம் (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (02 புள்ளிகள்)

**1.3** பின்வரும் கூற்றுக்களுள் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தொடர்பில் சரியான கூற்று எது?

(1) இலாப நோக்கற்ற நிறுவனங்கள் அங்கத்துவச் சந்தாப் பணங்களிலிருந்து மாத்திரமே வருமானத்தை ஈட்டுகின்றன.

(2) இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்குக் கிடைக்கப்பெறும் நன்கொடைகள் திரண்ட நிதியில் (accumulated fund) பதிவு செய்யப்படுகின்றன.

(3) இலாப நோக்கற்ற நிறுவனத்தின் பிரதான நோக்கமாக அமைவது இலாப நோக்கற்ற நிறுவனத்தின் மிகையினை அதிகரிப்பதாகும் (increase the surplus).

(4) மேற்கூறிய எதுவுமில்லை. (02 புள்ளிகள்)

**1.4** கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட B கம்பனியின்** 2017 ஏப்ரல் 01 இல் இருந்த பரீட்சை மீதியிலிருந்து பிரித்தறியப்பட்டவையாகும் :

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| மோட்டார் வாகனம் - கிரயத்தில் (2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில் கொள்வனவு செய்யப்பட்டது) | 5,000 | |
| திரண்ட பெறுமானத்தேய்வு – மோட்டார் வாகனம் | | 1,500 |

மோட்டார் வாகனத்தின் பயனுடைய ஆயுட்காலம் 10 வருடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2018 மார்ச் 31 இல் கம்பனியானது இந்த மோட்டார் வாகனத்தை **ரூ.** 3,200,000/- க்கு விற்பனை செய்தது.

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டமானது

(1) இலாபம் ரூ. 200,000/-. (2) நட்டம் ரூ. 200,000/-.

(3) இலாபம் ரூ. 300,000/-. (4) நட்டம் ரூ. 300,000/-. (02 புள்ளிகள்)

***1.5* *தொடக்கம்* *1.8* *வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.***

**1.5** **அமல், பிமல்** மற்றும் **சமல்** ஆகியோர் இலாப – நட்டங்களை முறையே 3:5:2 என்ற விகிதத்தில் பங்கிடுகின்ற பங்குடமை ஒன்றினை நடத்துகின்றனர். **பிமல்** பங்குடமையிலிருந்து இளைப்பாறத் தீர்மானித்துள்ளதுடன் **அமல்** மற்றும் **சமல்** ஆகியோர் இலாப – நட்டங்களை முறையே 3:2 என்ற விகிதத்தில் பங்கிட்டுக்கொண்டு பங்குடமையைத் தொடர்ந்து நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

புதிய பங்குடமையில் **அமல்** மற்றும் **சமல்** ஆகியோரின் ஆதாயம் பெறும் விகிதத்தைக் (Gaining ratio) கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.6** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிக்கும் பங்குடமைக்குமிடையிலான வேறுபாடுகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.7** கம்பனியொன்று முதலில் வந்தது முதலில் வெளியேறுதல் (FIFO) என்ற முறையைப் பயன்படுத்தி, தொக்கினை மதிப்பீடு செய்கின்றது. 2018 ஏப்ரல் 01 இல் கம்பனியானது தொக்கில் குறிப்பிட்ட பொருளின் 500 அலகுகளைக் கொண்டிருந்ததுடன் ஒரு அலகின் கிரயம் ரூ. 170/- ஆக மதிப்பிடப்பட்டது.

பின்வரும் ஊடுசெயல்கள் 2018 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றன :

| திகதி | கொள்வனவு | விற்பனை |
|---|---|---|
| ஏப்ரல் 05 ஆந் திகதி | - | 300 அலகுகள் |
| ஏப்ரல் 10 ஆந் திகதி | 150 அலகுகள் - ஒரு அலகு ரூ. 150/- வீதம் | |
| ஏப்ரல் 27 ஆந் திகதி | - | 250 அலகுகள் |

2018 ஏப்ரல் 30 இல் தொக்கின் மதிப்பினைக் (value of the inventory) கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.8** **வரையறுக்கப்பட்ட XYZ** நிறுவனத்தின் முகாமையானது 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக, 2018 யூன் 15 இல் அங்கீகரித்திருந்தது.

**வரையறுக்கப்பட்ட XYZ நிறுவனத்தின்** அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரும் வழங்குவதற்காக நிதிக் கூற்றுக்களை அங்கீகரிப்பதற்கு முன்னரும் இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகளின் அடிப்படையில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டுமா, இல்லையா என்பதைக் குறிப்பிடுக.

(1) கம்பனியானது சாதாரண பங்குதாரர்களுக்கான பங்கிலாபங்களைப் பிரகடனம் செய்தது.

(2) கிரயத்திலும் குறைவான விலையில் தொக்குகளின் விற்பனை

(3) வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை (Bankruptcy) அடைதல்

(4) தீ விபத்தின் காரணமாக பாரிய உற்பத்திப் பொறியொன்று அழிவடைதல் (04 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**ரெக்கோன் டிரேடர்ஸ்** நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

(1) 2018 ஏப்ரல் 30 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று கீழ்வருமாறு :

| | (ரூ.) | (ரூ.) |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியிலான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான (காசேட்டு) மீதி | | 15,200 |
| **கூட்டு :** வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் : | | |
| 265975 | 12,300 | |
| 265985 | 15,350 | 27,650 |
| **கழி :** தேறாத வைப்புகள் : | | |
| காசோலை வைப்பு 257461 | | (65,000) |
| **2018 ஏப்ரல் 30** இலான வங்கிக் கூற்றின்படியான மீதி | | **(22,150)** |

(2) 2018 மே 31 இல் வங்கியானது காசோலைப் புத்தகக் கட்டணமாக ரூ. 3,500/- கழித்துக் கொண்டது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வழங்கப்பட்ட பின்வரும் காசோலைகள் 2018 மே 31 வரை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை :

| காசோலை இல. | வழங்கிய திகதி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 265975 | 15.04.2018 | 12,300 |
| 266105 | 15.05.2018 | 3,200 |
| 266115 | 31.05.2018 | 60,000 |

(4) 2018 ஏப்ரல் 30 இல் உள்ளபடியான சகல தேறாத வைப்புகளும் 2018 மே மாதத்தில் தேறியிருந்தன.

(5) 2018 மே 29 இல் வங்கியானது ரூ. 13,200/- இனை தவறுதலாக **ரெக்கோன் கம்பனியின்** வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்திருந்தது.

(6) 2018 மே 27 இல் கம்பனியால் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட கீழ்வரும் காசோலை ஆனது 2018 மே 31 ஆந் திகதி வரை தேறியிருக்கவில்லை :

| காசோலை இல. | தொகை (ரூ.) |
|---|---|
| 452122 | 25,000 |

(7) 2018 மே 31 இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேட்டு) வரவு மீதியானது (சாதகமான) ரூ. 49,000/- ஆக இருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2018 மே 31 இலான செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) (02 புள்ளிகள்)

(b) 2018 மே 31 இலான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

2018 மே மாதத்திற்கான **செவன ஹாட்வெயார்** இன் ஏடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

| | ரூ. |
|---|---|
| கடன் விற்பனை | 750,000 |
| கடனுக்குக் கொள்வனவு | 350,000 |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 450,000 |
| கடன்கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவுகள் | 4,300 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற தொகை | 725,200 |
| கடன்பட்டோருக்குக் கொடுத்த கழிவுகள் | 14,800 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2018 மே 01 இல் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள் கீழ்வருமாறு :

| | ரூ. | |
|---|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 1,565,000 | (வரவு) |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 860,000 | (செலவு) |

(2) கடன்கொடுத்தோருக்குக் கொடுத்த ரூ. 12,600/- பெறுமதியான காசோலையானது போதியளவு பணமின்மை காரணமாக 2018 மே 31 இல் வங்கியால் திருப்பப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. **செவன ஹாட்வெயார்** அக்கொடுப்பனவை 2018 யூன் மாதத்தில் ஒரு புதிய காசோலை மூலம் தீர்ப்பனவு செய்ய இணங்கியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2018 மே மாதத்திற்காகக் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(b) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட சவுத்போல் (Southpole) தனியார் நிறுவனத்தின்** 2018 மார்ச் மாதத்திற்கான கணக்கேடுகளிலிருந்து பின்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| PAYE, கடன் தவணைப்பணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய (8%) கழிப்பனவுகளுக்கு முன்னரான அடிப்படைச் சம்பளம் | 7,320,000 |
| PAYE கழிப்பனவுகள் | 180,000 |
| கடன் தவணைப்பணக் கழிப்பனவு | 50,000 |

ஊழியர் சேமலாப நிதியத்திற்காக (EPF) ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்திலிருந்து 8% கழிக்கப் படுகிறது. ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தில் 12 % இற்குச் சமனான ஒரு தொகையானது, ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3 % இற்குச் சமனான ஒரு தொகையானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் கம்பனியால் செலுத்தப்படுகின்றது. ஊழியர்களுக்கான சம்பளமானது 2018 மார்ச் 31 இல் செலுத்தப்பட்டதுடன் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகியவற்றுக்கான பங்களிப்புகள் 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியில் செலுத்தப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2018 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகளைத் **தயாரிக்குக.**

(a) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு (salary control account) (03 புள்ளிகள்)

(b) ஊழியர் சேமலாப நிதிய கொடுப்பனவுக் கணக்கு (EPF payable account) (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 05

பங்குடமையொன்றின் பங்காளர்களான **அமல், கமல், நிமல்** இலாப, நட்டங்களை முறையே 2:2:1 எனும் விகிதத்தில் பகிருகின்றனர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கிறது :

(1) பங்காளர்கள் தமது ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளில் (opening capital account) ஆண்டிற்கு 10% வட்டி பெற உரித்துடையவராவார்.

(2) பங்காளர்கள் கீழ்வரும் சம்பளங்களைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் :

**கமல்** - மாதமொன்றுக்கு ரூ. 60,000/-

**நிமல்** - மாதமொன்றுக்கு ரூ. 25,000/-

(3) 2018 மார்ச் 31 ஆந் திகதி பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன :

*(ரூ. '000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள் | | |
| **அமல்** | | 2,000 |
| **கமல்** | | 2,000 |
| **நிமல்** | | 1,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் : | | |
| **அமல்** | 800 | |
| **கமல்** | 600 | |

(4) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் பகிர்வுக்கு முன்னரான நிகர இலாபம் ரூ. 2,329,000/- ஆக இருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

***பிறைட் லைற்*** (Bright lights) பங்குடமையின் பங்காளர்களான ***சன்*** மற்றும் ***மூன்*** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2 : 1 எனும் விகிதத்தில் பகிருகின்றனர்.

2018 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையில் பங்குடமையின் நாளாந்த நடவடிக்கைகளை ***சன்*** முகாமை செய்துவந்தார். அந்தத் திகதியிலிருந்து ***சன்*** பங்குடமையின் நாளாந்த நடவடிக்கைகளை முகாமை செய்வதிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்திருந்ததுடன் 2018 ஏப்ரல் 01 இல் இலாப – நட்டப் பகிர்வு விகிதத்தை மாற்றியமைப்பதன் மூலம் பங்குடமையின் நாளாந்த நடவடிக்கைகளை முகாமை செய்யும் பணியினைப் பொறுப்பேற்பதற்கு ***மூன்*** இணங்கியிருந்தார்.

***சன்*** மற்றும் ***மூன்*** ஆகியோருக்கிடையே மேற்கூறிய மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு கீழ்வருவனவற்றை மேற்கொள்ள அவர்கள் இணங்கியிருந்தனர் :

(1) 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 3,000,000/- ஆக இருந்ததுடன் நன்மதிப்புக் கணக்கொன்றினைத் தயாரிக்காது அதனைப் பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக செம்மையாக்கம் செய்தல் வேண்டும்.

(2) ***சன்*** மற்றும் ***மூன்*** ஆகியோருக்கிடையிலான இலாப – நட்டப் பகிர்வு விகிதத்தை முறையே 1:2 என மாற்றம் செய்தல் வேண்டும்.

(3) 2018 ஏப்ரல் 01 இல் ***மூன்,*** ரூ. 2,000,000/- பெறுமதியான தனது தனிப்பட்ட வாகனத்தை மேலதிக மூலதனமாக பங்குடமைக்கு மாற்றம் செய்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2018 ஏப்ரல் 01 இல் ஏற்பட்ட மேற்படி ஊடுசெயல்களைப் பதிவு செய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் (journal entries) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**றோஸ் கழகமானது** அரங்கத் (theatre) துறையை ஊக்குவிக்குமுகமாகவும் அதன் அங்கத்தவர்களின் பயன்பாட்டிற்காக உணவகமொன்றை நடத்துவதற்குமென உருவாக்கப்பட்ட ஓர் அங்கத்துவக் கழகமாகும்.

2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **றோஸ் கழகத்தினது** ஊடுசெயல்களை கீழேயுள்ள கொள்ளல் - கொடுத்தல் கணக்கு காட்டுகிறது :

*(ரூ. '000)*

| **கொள்ளல் - கொடுத்தல் கணக்கு** | | | |
|---|---|---|---|
| 2017.01.01 இல் மீதி | 3,500 | உணவுச்சாலை வழங்கல்களின் கொள்வனவு | 18,000 |
| நன்கொடைகள் | 6,000 | உணவுச்சாலையின் ஏனைய செலவுகள் | 3,400 |
| நாடக நுழைவுச்சீட்டு விற்பனை | 25,000 | நாடகக் கலைஞர்களுக்கான கொடுப்பனவு | 5,000 |
| அங்கத்தவர் சந்தா | 4,000 | நாடக விளம்பரச் செலவு | 1,500 |
| உணவுச்சாலை விற்பனைகள் | 30,000 | அரங்க உபகரணங்கள் (2017 டிசெம்பர் 31 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 10,000 |
| | | நாடகத் தயாரிப்புச் செலவுகள் | 15,000 |
| | | மின்சாரம் | 1,500 |
| | | 2017.12.31 இல் மீதி | 14,100 |
| | **68,500** | | **68,500** |

சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு : *(ரூ. '000)*

| **மீதி** | **2017 சனவரி 01 இல்** | **2017 டிசெம்பர் 31 இல்** |
|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் - முன்கொணரற் பெறுமதியில் | 70,000 | 68,000 |
| அரங்கத்திற்கான உபகரணங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 12,000 | 17,000 |
| நிலுவையிலுள்ள அங்கத்தவர் சந்தா | 700 | 500 |
| முற்பணமாகவுள்ள அங்கத்தவர் சந்தா | 300 | 200 |
| உணவுச்சாலையிலுள்ள தொக்கு (கிரயத்தில்) | 7,000 | 5,000 |

- நன்கொடைகள் இந்த ஆண்டிற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் மின்சாரக் கட்டணத்தில் 1/3 பங்கு உணவுச்சாலைக்கு ஒதுக்கீடு செய்யப்படவும் வேண்டும்.
- ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட அரங்கத்திற்கான உபகரணங்களைத் தவிர ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பில் வேறெந்த சேர்ப்பனவுகளோ அல்லது விற்பனைகளோ இடம்பெற வில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**றோஸ் கழகத்திற்காகக்** கீழ்வருவனவற்றைக் **தயாரிக்குக** :

(a) 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உணவுச்சாலை வியாபாரக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**"பெற்றி கலெக்ஷன்"** என்பது **திரு. பெரேரா** அவர்களுக்குச் சொந்தமானதும் அவரால் நடத்தப்படுவதுமான பண்ணைப் பொருட்களை விற்பனைசெய்யும் ஒரு கடையாகும். அவர் உரிய கணக்கேடுகளைப் பேணுவதில்லை.

கீழ்வரும் தகவல்கள் **"பெற்றி கலெக்ஷன்"** இன் பதிவுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

(1) வியாபாரத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

*(ரூ. '000)*

| | **2017 ஏப்ரல் 01 இல்** | **2018 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் (முன்கொணரற் பெறுமதியில்) | 15,000 | 13,000 |
| மோட்டார் வாகனம் (முன்கொணரற் பெறுமதியில்) | 7,000 | 9,000 |
| தொக்கு – கிரயத்தில் | 5,000 | 7,000 |
| வங்கி மீதி | 6,000 | ? |
| வியாபார வருமதிகள் | 6,000 | 7,000 |
| வியாபார சென்மதிகள் | 7,000 | 9,000 |
| அட்டுறு மின்சாரக் கட்டணம் | 500 | 750 |

(2) 2017 அக்டோபர் 01 இல், வியாபாரத்தின் பாவனைக்காக ரூ. 5,000,000/- கிரயத்தில் மோட்டார் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. இதனைத் தவிர இவ்வாண்டில் வேறு எவ்வித ஆதனம், பொறி மற்றும் உபகரணச் சேர்ப்பனவுகளோ அல்லது விற்பனைகளோ இடம்பெறவில்லை.

(3) நிறுவன வங்கிக் கணக்கிலிருந்து ரூ. 1,000,000/- ஐ உரிமையாளர் தனது தனிப்பட்ட தேவைக்காக எடுத்திருந்தார்.

(4) ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட ஏனைய வங்கிக் கொடுப்பனவுகள் கீழ்வருமாறு :

| | **ரூ. '000** |
|---|---|
| வியாபார சென்மதிகளுக்கான கொடுப்பனவுகள் | 45,000 |
| பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 500 |
| மின்சாரம் | 1,500 |
| சம்பளம் | 5,000 |

(5) எல்லாக் கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(6) சகல விற்பனைகளும் கிரயத்தில் 50 % மொத்த இலாபத்தைப் பெறும் வகையில் **திரு. பெரேரா**வால் மேற்கொள்ளப்பட்டன.

(7) சகல ஊடுசெயல்களும் நிறுவனத்தின் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2018 மார்ச் 31 ஆந் திகதியிலான **"பெற்றி கலெக்ஷன்ஸின்"** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 09

**அசான், ஹசான்** மற்றும் **றொசான்** ஆகியோர் **'த சான்ஸ்'** பங்குடமையின் பங்காளர்கள் ஆவர். அவர்கள் இலாப, நட்டங்களை முறையே 2:2:1 எனும் விகிதத்தில் பகிருகின்றனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றைக் கொண்டுள்ளது :

- பங்காளர்கள் தமது ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளில் (opening capital account) ஆண்டிற்கு 5 % வட்டி பெற உரித்துடையவராவர்.
- **ஹசான்** மாதாந்தம் ரூ. 15,000/- சம்பளம் பெற உரித்துடையவர்.

(2) 2018 மார்ச் 31 இல் **றொசான்** பங்குடமையிலிருந்து ஓய்வுபெறவும் **அசான்** மற்றும் **ஹசான்** ஆகியோர் கீழ்வரும் நிபந்தனைகளுக்கு உடன்படவும் தீர்மானித்தனர் :

- 2018 மார்ச் 31 ஆந் திகதியில் பங்குடமையின் நன்மதிப்புப் பெறுமதி ரூ. 1,800,000/- ஆக இருந்ததுடன் நன்மதிப்புக் கணக்கொன்றைத் தயாரிக்காது அது பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக செம்மையாக்கம் செயயப்பட வேண்டும்.
- 2018 மார்ச் 31 இல் காணி மற்றும் கட்டடங்கள் பின்வருமாறு மீள்மதிப்பிடப்பட்டன :

*(ரூ. '000)*

| | **2018 மார்ச் 31 இலான மீள்மதிப்புப் பெறுமதி** | **கிரயம்** | **2018 மார்ச் 31 இலான திரள் தேய்மானம்** |
|---|---|---|---|
| காணியும் கட்டடங்களும் | 2,400 | 1,800 | 300 |

காணி மற்றும் கட்டடங்களானவை மீள்மதிப்புத் தொகைகளில் முன்கொணரப்படுகின்றன.

- **றொசானுக்கு** கொடுக்கவேண்டிய மொத்தத் தொகையானது ஓய்வுபெற்று ஒரு மாத காலத்தின் பின் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்.
- இலாப, நட்டங்களானவை **அசான்** மற்றும் **ஹசானுக்கிடையில்** முறையே 3:2 என்ற விகிதத்தில் பகிரப்பட வேண்டும்.

(3) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய பங்குடமையின் நிகர இலாபம் ரூ.2,500,000/- ஆக இருந்தது.

(4) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன :

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள் : | | |
| **அசான்** | | 5,000 |
| **ஹசான்** | | 3,000 |
| **றொசான்** | | 2,000 |
| 2017 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள் : | | |
| **அசான்** | | 500 |
| **ஹசான்** | | 300 |
| **றொசான்** | 200 | |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

மேற்படி ஊடுசெயல்களைப் பதிவுசெய்வதற்காக, 2018 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான **த சான்ஸ்** பங்குடமைக்காக பின்வருவனவற்றைத் **தயாரிக்குக.** :

(a) பங்காளர் நடைமுறைக் கணக்குகள் (04 புள்ளிகள்)

(b) பங்காளர் மூலதனக் கணக்குகள் (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

## வினா 10

வியாபார வணிகத்தில் ஈடுபடும் **வரையறுக்கப்பட்ட ஜெயா கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து 2018 மார்ச் 31 இல் பிரித்தறியப்பட்ட பரீட்சை மீதி கீழ்வருமாறு :

*(ரூ. '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (300,000 சாதாரண பங்குகள்) | | 45,000 |
| 2017 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 10,000 |
| செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் | 2,500 | |
| 10 % தனிச்சங்கள் | | 25,000 |
| காணி மற்றும் கட்டடம் - கிரயத்தில் (காணி - ரூ. 20 மில்லியன்) | 70,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 90,000 | |
| 2017 ஏப்ரல் 01 இலான திரள் தேய்மானம் : | | |
| கட்டடங்கள் | | 14,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 36,000 |
| தொக்குகள் - 2018 மார்ச் 31 இல் | 55,000 | |
| வியாபார வருமதிகள் | 45,500 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு - 2017 ஏப்ரல் 01 இல் | | 1,250 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 2,650 | |
| விற்பனை | | 368,000 |
| விற்பனைக் கிரயம் | 235,000 | |
| விநியோகச் செலவுகள் | 15,000 | |
| நிருவாகச் செலவுகள் | 43,000 | |
| செலுத்தப்பட்ட தனிச்ச வட்டி | 1,250 | |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | 750 | |
| வியாபார சென்மதிகள் | | 48,000 |
| தொங்கல் கணக்கு | | 11,000 |
| வருமான வரி ஏற்பாடு – 2017 ஏப்ரல் 01 இல் | | 2,400 |
| | **560,650** | **560,650** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2018 மார்ச் 31 ஆந் திகதியிலான எண்ணப்பட்டு, கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட இறுதித் தொக்கானது கணக்கேடுகளில் பதிவுசெய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து 2018 ஏப்ரல் 20 இல் நடாத்தப்பட்ட மீளாய்வின்போது ரூ. 5,000,000/- கிரயமான மேற்படி தொக்கின் ஒரு பகுதி வழக்கிழந்து காணப்பட்டது. இதனை 2018 ஏப்ரல் 30 இல் ரூ. 4,200,000/- க்கு விற்பனை செய்ய கம்பனி எதிர்பார்க்கின்றது.

(2) 2017 ஏப்ரல் 01 இல் கம்பனி ஒவ்வொன்றும் ரூ. 100/- ஆன 250,000 எண்ணிக்கையிலான 10 % தனிச்சங்களை வழங்கியது. வட்டியானது தனிச்சங்கள் மீது ஆண்டிற்கு இரு தடவை செலுத்தப்படும். ஆண்டின்போது செலுத்தப்பட்ட வட்டியானது செலுத்தப்பட்ட தனிச்சங்களிற்கான வட்டிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

கட்டடங்கள் : 25 ஆண்டுகள்

மோட்டார் வாகனம் : 10 ஆண்டுகள்

ஆண்டிற்கான முழுமையான பெறுமானத்தேய்வானது நிருவாகச் செலவுக் கணக்கில் வரவிலும் தொங்கற் கணக்கில் செலவிலும் பதிவுசெய்யப்பட்டது.

(4) தனது வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து கம்பனிக்கு வருமதியாகவிருந்த ரூ.500,000/- தொகை ஆனது 2018 மே 05 இல் அவர் இறந்ததன் காரணமாக அறவிடமுடியாததாகியுள்ளது. மேலும் ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள வியாபார வருமதிகள் மீதியின் 5 % இல் ஐயுறவுக்கடன் ஏற்பாட்டைப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(5) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் கீழ்வரும் அட்டுறு மற்றும் முற்கொடுப்பனவுச் செலவுகள் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும் :

| | ரூ. |
|---|---|
| அட்டுறு – கட்டடப் பராமரிப்புச் செலவுகள் | 400,000 |
| முற்கொடுப்பனவு - விளம்பரச் செலவுகள் | 150,000 |

(6) வரிமதிப்பாண்டு 2016/17 க்கு மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 2,650,000/- ஆக இறுதிப்படுத்தப் பட்டு, 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் முழுமையாகச் செலுத்தப்பட்டது. செலுத்தப்பட்ட தொகையானது, செலுத்திய வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது. வரிமதிப்பாண்டு 2017/18 க்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 2,800,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையினால் 2018 யூன் 30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**வரையறுக்கப்பட்ட ஜெயா நிறுவனத்தின்** முகாமையின் பயன்பாட்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (12 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 ஆந் திகதியிலான நிதிநிலைக்கூற்று (13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

## செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01 கிரகித்தல்** முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02 பியோகித்தல்** கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03 பகுப்பாய்வு** எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |